**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் - 2023**

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள்

பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்கள் அல்லது அதற்கு குறைந்த காலத்திற்கான முதலீடு, காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளாக கருதவேண்டியிருந்த போதிலும் 03 மாதங்களுக்குக் குறைந்த ரூபா 144,925,413 ஆன முதலீடு, நிதி நிலைமைக் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணம், காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக அரச நிறுவனமொன்றின் காசு மீதி மிகையாகப் பேணிச் செல்லப்படுகின்ற தவறான விம்பத்தை வெளிப்படுத்தப்படுகின்றமையால் முதலிடாக காண்பித்தல் மிகவும் புத்திசாலித்தனமாக இருந்தது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்திக்கு முரணாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள காணி மற்றும் பொலிஸ் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணி என்பன மீள் மதிப்பீடு | இந்தக் கட்டிட நிர்மாணம் மற்றும் காணி கைப்பற்றல் இரண்டும் 2023 ஆம் ஆண்டில் ஏற்பட்டமையினால் அந்த சொத்துக்களில் மேற்கூறப்பட்ட பெறுமதிகளுக்கிடையே | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| செய்யப்படாமல் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் கூட்டுமொத்தமாக கிரயம் ரூபா 15,213,947 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | பொருண்மையான வேறுபாடுகள் ஏற்படாதிருந்தமையால் மீள்மதிப்பீடு செய்தல் நடைமுறையில் இல்லாதிருந்ததுடன் அவற்றை கிரயத்தின் அடிப்படையில் மதிப்பிடுதல் மிகவும் புத்திசாலித்தனமானது என. | வேண்டும். |

### 1.5.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தில் 02 வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 2,429,951 தொகை 01 மாதம் முதல் 02 வருடங்களுக்கிடையிலான கால வீச்சிலிருந்து சரியாக இனங்கண்டு சரி செய்யப்படாமல் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நதனாவித வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | காலரீதியில் உரிய தரப்பினரால் தமது வைப்புத் தொடர்பாக பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் போது அந்த பெறுமதியை இனங்கண்டு உரிய பேரேட்டில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நேரடி செலவு வைத்தல்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் தொலைக் கல்வி மற்றும் தொடர்கல்வி நிலையத்தின் (CDCE) நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2023 சனவரி 20 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த கட்டிடத்திற்காக மேலும் செலுத்தவேண்டிய ரூபா 12,363,765 மற்றும் ரூபா 3,295,900 பெறுமதிசேர் வரி தொகை மூலதனமாக்கப்படாமையின் காரணமாக கட்டிடப் பெறுமதி ரூபா 15,659,665 குறைத்தும் அட்டுறு செலவினம் ரூபா 12,363,765 குறைவாகவும், வேலை முற்பணம் ரூபா 3,295,000 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்தக் கட்டிடத்திற்குரிய மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு ரூபா 740,080 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். உரிய செயற்திட்டத்தின் பட்டியல் பெறுமதி 2023.12.31 இல் உள்ளவாறு உறதிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் அவை அட்டுறு செலவினமாக மேற்கொள்ள முடியாதிருந்தது என. | சொத்துக்கள், பொறுப்புக்கள், செலவினங்கள் என்பவற்றை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வெண்டும். |
| (இ) | வேலை பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற கூட்டுப் பெறுமதி ரூபா 8,011,381 ஆன 02 கட்டிடங்கள் நடைமுறையல்லா சொத்துக்களான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்படாமல் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் நடைமுறை வேலை அதிகரித்தும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது கணக்கீட்டு வழுக்களாக இருந்ததுடன் தற்போது அந்தத் தவறு சரி செய்யப்பட்டுள்ளது. | கணக்கீட்டு வழுக்கள் ஏற்படாத வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே அந்தக் கட்டிடங்களுக்குரிய மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் உரிய பெறுமானத் தேய்வு முறையே ரூபா 400,569 மற்றும் ரூபா 403,909 கணக்கீடு செய்ய்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 29 ஆம் திகதி மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கில் இருந்து இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 7,000,000 தொகை, காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் கீழ் காண்பிக்கப்படாமல் நானாவித முற்பணம் மற்றும் கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது கணக்கீட்டு வலுக்களாக இருந்ததுடன் சரிசெய்யப்பட்டுள்ளது என. | நடைமுறைக் கணக்கிற்கிடையே மாற்றப்பட்ட தொகை, காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காணபிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட இருப்பு, இருப்பு மெய்மையாய்வு அறிக்கை இருப்புக்களுடன் இணக்கம் செய்யும் போது 04 களஞ்சயங்களின் இருப்பில் ரூபா 976,716 இணக்கமின்மை காணப்பட்டது. | இந்த வேறுபாடுகள் காலாவதியான இரசாயன இருப்புக்களிலிருந்து ஏற்பட்டிருந்தது என | இருப்பு மெய்மையாய்வின் பின்னர் பெறப்பட்ட சரியான மீதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியான இருப்புக்கள் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இணக்கம் செய்யும் போது நிதிநிலைமைக் கூற்றில் அந்த இருப்பு ரூபா 1,005,353 குறைத்து காண்பிக்கப்ட்டிருந்தது | இந்தப் பொருட்கள் தொடர்பாக மீண்டும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி உள்ளபடியாக பயன்படுத்த முடியாத பொருட்களை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | காலாவதியான இருப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழில்படு மூலதன மாற்றங்களின் கீழ் பெறவேண்டிய மீதிகளின் அதிகரிப்பு ரூபா 55,216,542 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த அதிகரிப்பு ரூபா 50,085,842 ஆனமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 5,130,700 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இது காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த இரட்டை கணிப்பீட்டு வழுவொன்றாக இருந்ததுடன் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியான முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது மீள் மதிபபீடு செய்யப்பட்ட தடவியல் பீடத்தின் காணி மீள்மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யும் போது அந்தக் காணியில் ரூபா 2,383,259 ஆன கிரயத்தை கவனத்தில் கொள்ளாமல் மொத்த மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையும் கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் மீதி மற்றும் மீள்மதிப்பீட்டு மிகை என்பன அப்பெறுமதியால் அதிகரித்து நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊற்றுக்கொள்கின்றோம். தடயவியல் பீடத்தின் காணிகள் எந்தவொரு பெறுமதியும் காணி ஆரம்ப பெறுமதியில் உள்ளடக்கப்பட வில்லை. | காணியின் கிரயத்தை கவனத்தில் கொண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் வாகனங்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 121,288,000 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி கணக்கீடு செய்யும் போது ரூபா 126,388,000 ஆக குறிப்பிடப்பட்டமையால் மீள்மதிப்பீட்டு மிகை மற்றும் வானங்களின் பெறுமதி என்பன ரூபா 5,100,000 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 126,388,000 சரியானதாகும். | மீள் மதிப்பீட்டுப் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலப்பகுதியில் இருந்து கொண்டுவரப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 1,163,655 ஆன கேள்வி வைப்புக்கள் மற்றும் 02 வருடங்கள் முதல் 13 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற கூட்டுமொத்தமான ரூபா 59,819,645 ஆன ஒப்பந்தம் மற்றும் நானாவித நிறுத்தி வைத்தல் பணம் தொடர்பாக நிதிப்பிமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவற்றின் விடுவித்தல் ஒங்குமுறையாக மேற்கொள்ளப்படுகின்றது என. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் XX அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனங்களிலும் சேவையில் ஈடுபடுத்துகின்றவர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கை நேரம் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் கல்விசார் பதவியணியினர் அதன் பிரகாரம் செயல்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என. | பல்கலைக்கழக தாபன விதிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செசயறபாட்டு விளைவுகள் ரூபா 274,616,654 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,452,634 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் பற்றாக்குறை ரூபா 263,164,020 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆண்டின் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மிகிந்தலை வளவில் 04 இரட்டை ஊழியர் உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணித்தல் தொடர்பாக ரூபா 52,703,236 தொகைக்கு உரிய ஒப்பந்தம் 2016 திசம்பர் 23 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக ரூபா 15,859,979 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் ஆற்றப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 10,620,619 ஆக காணப்படும் போது குறித்துரைத்த பிரகாரம் வேலை நிறைவேற்றப்படாமையின் காரணமாக பல்கலைக்கழகத்தால் 2019 பெப்ரவரி 20 ஆந் திகதி உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்தது. அத்திகதியில் ரூபா 15,760,611 மேலும் ஒப்பந்தகாரரிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்த போதும் ரூபா 3,952,742 ஆன முற்பண பிணை முறி மற்றும் ரூபா 10,540,647 ஆன செயலாற்றல் பிணைமுறி காலாவதியாவதற்கு முன்னர் பணமாக்கிக் கொள்வதற்கான இயலுமை காணப்பட்ட போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 15,760,611 நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வு திகதியான 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை முறிகளின் காலத்தைக் நீடிக்குமாறு ஒப்பந்தகாரர் DFCC வங்கிக்கு அறிவித்து செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது செயற்திட்டம் தொடர்ச்சியாக குறைந்த செயல் முன்னேற்றத்தை காண்பித்ததுடன் 2018 ஆகஸ்ட் இல் ஒப்பந்தகாரரிடம் காணப்பட்ட நிதி வசதியீனத்தினால் வைவிடப்பட்டிருந்தது. இது தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | முற்பணக் காப்பீடு மற்றும் செயலாற்றல் காப்பீடு என்பவற்றை பணமாக்கிக் கொள்வதற்கு முடியாமையினால் ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உடன்படிக்கை செய்யப்பட்ட தொகை ரூபா 42,979,355 ஆன மருத்துவ பீடத்தின் 03 இரட்டை உத்தியோகபூர்வ இல்லங்கள் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2017 மே 30 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு பல சந்தர்ப்பங்களின் போது திகதி நீடிக்கப்பட்ட பின்னர் 2019 ஏப்ரல் 19 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் எனினும் ரூபா 29,239,233 ஆற்றப்பட்ட வேலைப் பெறுமதியின் பின்னர் ஒப்பந்தகாரர் நிர்மாணத்தைக் கைவிட்டு இருந்ததுடன் அதுவரை ஒப்பந்தகாரருக்கு ரூபா 21,798,120 | ஒப்பந்தகாரரிடம் காணப்பட்ட நிதி நெருக்கடியினால் குறித்துரைத்த திகதியின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் இழப்பீடாக ரூபா 4,297,935.50 ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்தகாரருக்கு இந்த செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் | முற்பணக் காப்பீடு மற்றும் செயலாற்றல் காப்பீடு என்பவற்றை காலாவதியாவதற்கு முன் பணமாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்காக பொறுப்புவாய்ந்த |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த்திற்குரிய ரூபா 2,148,967 ஆன செயலாற்றல் காப்பீடு மற்றும் ரூபா 9,885,251 ஆன முற்பண காப்பீடு முறையே 2020 சனவரி 08 ஆந் திகதி மற்றும் 2019 யூலை 30 ஆம் திகதி காலாவதியாகி இருந்தமையால் அந்த காப்பீட்டின் மூலம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வு திகதியான 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புரிந்துணர்வுடன் முடிவுறுத்துவதற்காக இறுதிப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உத்தியோகத்தரிட மிருந்து அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக வளவில் 2023 மார்ச் 01 ஆந் திகதி முதல் 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலத்தில் பாதுகாப்பு சேவை வழங்கும் பெறுகை நடைமுறைகளின் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் பந்தி, 2.11.3 ஆம் பந்தி, 7.9.11 (அ) மற்றும் (இ) பந்திகள், 8.8.2 ஆம் பந்தி மற்றும் 1941 இன் 27 ஆம் இலக்க சம்பளக் கட்டுப்பாட்டு சபை கட்டளைச் சட்டத்தின் 44 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 58,044,125 ஆன ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தொழில்நுட்ப குழு அங்கத்தவர்கள் 04 பேர்களினால் தகுதியான கேள்வியாக பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் தொழில்நுட்பக் குழு அதன் ஒரு அங்கத்தவரினால் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படாத மதிப்பீட்டு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் ரூபா 63,929,750 ஆன இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் ஏற்றுக்கொள்ளப்பட்டமையால் பல்கலைக்கழக நிதியத்திற்கு ரூபா 5,885,625 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 07 ஆம் திகதி வரையான காலம் 15 வாரங்களாக இருந்தமையால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 இன் கால அட்டவணைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என். 2023.01.30 ஆந் திகதி நடைபெற்ற பெறுகைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்துடன் இணங்காத உத்தியோகத்தரின் கணிப்பீடுகள் பிழையாக இருந்தமையும் அந்த தீர்மானம் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு தலைவர் எதிர்ப்புத் தெரிவிக்காமையினாலும் அவற்றுடன் இணங்கி ஒப்பந்தம் கையளித்தல் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் ஊழியருக்காக ஒரு சேவை பாதுகாப்பிற்கு செலுத்த வேண்டிய தொகை ஊழியருக்காக செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த நாளாந்த சம்பளத்தை கவனத்திற் கொண்டு கணிப்பீடு மேற்பட்டிருந்தது. | பல்கலைக்கழக நிதியத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் மிகவும் நலன்வாய்ந்த தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியம் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 2.10 ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்பட்ட ஆராய்ச்சி முற்பணங்கள் 90 நாட்களுக்குள் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் 12 விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமாக ரூபா 1,227,223 ஆன முற்பணத்திற்காக மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடம் முதல் 13 வருடங்கள் வரையிலான கால வீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த முற்பணங்களை தீர்த்துவைப்பதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைக்கப் படாதிருக்குமாயின் உரிய உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிககை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2009 சனவரி 07 ஆம் திகதிய இலக்கம் 904 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாடு செல்வதற்கு முன் பிணைமுறியின் கீழ் உட்பட வேண்டியிருந்த போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் காணப்பட்ட Enhancing Governance, Government Management and Reform in Sri Lankan Universities through Non-Academic Staff Training (ENACT) நிகழ்ச்சித் திட்டத்திற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் மீண்டும் வருகை தராமையினால் அவரிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 1,659,877 தொகையை அறவிடுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. மேலும் கூட்டுமுயற்சி உடன்படிக்கையின் 13.1 பிரிவிற்கு முரணாக வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முகாமையாளரால் தகுதியான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யாமை, கேட்டு விலகுவதை அங்கீகரித்தல் மற்றும் ஓய்வு பெற்றுச் செல்லல் பயிற்சியின் பின்னர் 05 வருட காலம் கட்டாயமாக சேவையில் ஈடுபடாதிருந்தமையால் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 2,097,837 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 2023.02.27 ஆம் திகதி நடைபெற்ற 264 ஆவது நிருவாக சபையினால் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுக்குமாறு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இது வரையில் பத்திநாயக்க என்பவரிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 1,659,877.54 தொகையை அவரின் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே மிகுதி நடவடிக்கைகளுக்காக ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெறும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் விரிவுரை மண்டபத்தின் | இந்த சீலிங் (ceiling) உடைந்து விழும் போது | ஏற்பட்டிருந்த நட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | சீலிங் (ceiling) 2019 ஒக்டோபர் 26 ஆம் திகதி உடைந்து விழுந்தமையால் அதில் காணப்பட்ட 405 கதிரைகளை பாதுகாப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்காமையின் காரணமாக அந்த கதிரைகள் துரப்பிடித்திருந்தது. அந்த கதிரைகளைப் பழுதுபார்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,657,500 செலவிடப்பட்டதன் காரணமாக பல்கலைக்கழக நிதியத்திற்கு நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது. | அதனுடன் சீலிங் (ceiling) இல் தங்கியிருந்த வவ்வால்களின் மலக் கழிவுகள் கதிரைகளில் விழுந்ததன் மூலம் கதிரை உறைகள் உக்கும் நிலைக்கு உட்பட்டமை முகாமைத்துவத்தின் செயற்திறனின்மையின் மூலம் ஏற்பட்டது என்பதை நிராகரிக்க முடியாதிருந்தது. | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | பிணைமுறியை மீறியிருந்த 09 விரிவுரையாளர்களிடமிருந்து 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரை 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 71,332,305 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. பிணைமுறி பெறுமதியைப் பதிவழிப்பதற்கு ஏற்பாடுகள் வழங்கப்படாதிருக்கும் போது 2023 யூன் 26 ஆம் திகதி நடைபெற்ற 272 ஆவது நிருவாக சபைக் கூட்டத் தீர்மானத்தில் பிணை முறியை மீறிய இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து 2023 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 15,154,309 தொகை 2023 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | உரிய விரிவுரையாளர்கள் இருவரும் தாமதமாகியேனும் பட்டப்பின் படிப்பை பூர்த்திசெய்து சான்றிதழை பல்கலைக் கழகத்திற்கு சமர்ப்பித்திருந்தனர். | 2022 யூன் 22 ஆந் திகதிய இலக்கம் 02/2022 என்ற பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசம்பர் 31 ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்கு ஒப்பந்த பெறுமதி ரூபா 17,500,000 ஆன உள்ளக இணைப்பு முகாமைத்துவ மென்பொருள் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக உடன்படிக்கையில் 2021 திசம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்து கையளிக்க வேண்டியிருந்த போதும் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்து பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் இது 09 மொடிவுலுடன் செயற்படுகின்ற ஒன்றாக இருந்ததுடன் தற்போது மிகவும் சிக்கலான 03 முறைமைகள் அமுல்படுத்தப்படுகின்றது என. | உள்ளக இணைப்பு மென்பொருள் முறைமை உடன்படிக்கையின் பிரகாரம் விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 1/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் 2024 ஏப்ரல் 02 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகத்தின் நிதி உத்தியோகத்தர் பதவி வெற்றிடம் இந்த நிதி நிலைமைக் கூற்றை குறித்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தமைக்கு தாக்கமளித்திருந்தது என. | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |